மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

தூர் வாருதல்

*__271__—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை அணையினைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் பேச்சிப்பாறை அணையினைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா என்று கேள்வி எழுப்பியுள்ளார். அரசு ஆவன செய்யும்.

(ஆ) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசில், உலக வங்கி நிதியுதவியுடன் 2011–2012 ஆம் ஆண்டில் அணைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல் திட்டத்தின்கீழ், பகுதி–II–ல், ரூ.33.25 கோடிக்கு சுருக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 5.00 கோடிக்கு பேச்சிப்பாறை அணையினைத் தூர் வாருவதற்கென வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதலும், நிதியுதவியும் கிடைக்கப் பெற்ற பின் பேச்சிப்பாறை அணையினைத் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் பொதுப் பணித் துறை மற்றும் ஊராட்சி, நகராட்சிக்குத் தேவையான கட்டுமான வேலைகளுக்கும், பொதுமக்கள் வீடுகள் கட்டுவதற்கும் தூத்துக்குடியிலிருந்து மணல் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆகவே, பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருவதன்மூலம் கிடைக்கும் மணலை அரசு விலை நிர்ணயம் செய்து, அது விநியோகம் செய்யப்பட வேண்டுமென்றும், அரசுக்கு அதனால் வருமானம் கிடைக்கும் என்றும், குமரி மாவட்ட மக்களும் அதிக அளவில் பயன்பெறுவார்கள் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த அணையைத் தூர் வார மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறையிலிருந்து சுமார் 17 கிலோ மீட்டர் நீளத்தில் செல்லும் அந்தக் கால்வாயைத் தூர் வாரி, பழுதுபார்த்து, புனரமைக்கும் பணியைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்க்கால்களைத் தூர் வாருவது பற்றிப்

பரிசீலிக்கப்பட்டு அப்பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டுகளுக்கு முன்பாக முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய இங்கிலாந்து பொறியாளர் கர்னல் பென்னி குயிக் அவர்களுக்கு தாயுள்ளத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் உருவச் சிலையுடன் கூடிய புதிய மணி மண்டபத்தைக் கட்டுவேன் என்று கூறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக ஐந்து மாவட்ட விவசாயிகளின் சார்பாக முதற்கண் எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அணையைக் கட்டிய பென்னி குயிக் அவர்கள் அமைத்த அந்த நீர்வரத்து வாய்க்கால் வழியாகத்தான் தென் மாவட்டங்களுக்கு நீர் சென்றிருந்தது. 50 ஆண்டுகளுக்கு முன்பாக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் வைகை அணையில் ஒரு அணையைக் கட்டினார்கள். அந்த அணையின் மூலமாகத்தான் தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்ட விவசாயிகளுக்கு நீராதாரமும், குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தங்க. தமிழ்ச்செல்வன், அன்பு கூர்ந்து கேள்விக்கு வாருங்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *கேள்விதான் கேட்கிறேன். அப்பொழுது அந்த அணையினுடைய கொள்ளளவு 71 அடி. இப்பொழுது அந்த அணையினுடைய கொள்ளளவு 50 அடிக்குக் குறைவாகக் குறைந்திருக்கிறது. காரணம் மணலும், மண்ணும் சேர்ந்து 22 அடி தண்ணீர் தேக்க முடியாத ஒரு சூழ்நிலை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேனி மாவட்டம் வருகின்றபொழுது ஆயிரக்கணக்கான விவசாயிகள் அந்த அணையைத் தூர் வார வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு அந்த அணையைத் தூர் வாருவதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

2012 *பிப்ரவரி* 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. விரைவிலே அது முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் 11 கால்வாய்கள் தூர் வார வேண்டும் என்ற மக்களுடைய நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றுவதோடு, அதன் மூலமாக கொசுத் தொல்லையை ஒழித்து, மதுரை மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுத் தொல்லை எல்லாம் பொதுப் பணித் துறையிலே வராது. அது உள்ளாட்சித் துறையின்கீழ் வருகின்ற கேள்வி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

சுற்றுலாத் தலம்

***4340—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, நாங்கூரில் உள்ள எழு திருப்பதி பகுதியை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?